மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயம் பேரூராட்சிப் பகுதியைப் பொறுத்தவரையிலே, மலைப் பகுதியாகவும், அதிகமான விவசாயப் பெருங்குடி மக்கள் வசிக்கின்ற பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவியர் மிக நீண்ட தூரம் பயணம் செய்து பள்ளிக்கு வர வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், அந்த மேல்நிலைப் பள்ளியிலே மாணவியர் விடுதி அமைத்துத் தந்தால், அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஆலங்காயம் பேரூராட்சியிலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவியர் விடுதி அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

60—

நடமாடும் மருத்துவக் குழு

***28385 திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி நான்கு வழிச் சாலைப் பகுதியில் நடமாடும் மருத்துவக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11—20

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு

வணங்குகிறேன். ஒரு வட்டாரத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவமனை என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசினுடைய கொள்கை. அதன்படி, மதுரை மாவட்டம், டி. வாடிப்பட்டி வட்டாரத்தில், கச்சைகட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த நடமாடும் மருத்துவக் குழு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த நான்கு வழிச் சாலைப் பகுதியிலும் இந்த நடமாடும் மருத்துவக் குழு தனது சேவையை செய்திடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழேகால் கோடி தமிழினம் வெகுமானம் பெறுவதற்கு விடிவெள்ளியாக வந்த ஒளி வானமே, ஏழையெளியவர்களின் வாழ்வில் ஒளியேற்றி, நற்றமிழ் பூமியை நடைபூட்டிச் செல்கின்ற பிடிமானமே, அரசியல் சிம்மாசனத்தின் மாண்பை வளர்க்கும் அட்சயபாத்திரமான அன்னலட்சுமியே, அமுதமொழி காக்க வந்து அவதரித்த அதிசயமே, ஆச்சரியமும், பூச்சரியமும் கொண்ட ஆலயமே, பொறுப்புகளைச் சுமந்து வெறுப்புகளை வென்று நெருப்பாற்றில் நீந்தி நித்தம் நித்தம் வெற்றிகளைக் குவிக்கின்ற சத்தியத் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் வளர்த்த மதுரையிலே, வைகை நீர் பாய்ந்தோடிச் செழிக்கும் கடைக்கோடி கிராமமான வாவிடமருதூர் கிராமத்தில் பிறந்த, எனது மகள் திருமணத்தை, உலகத்தில் அகிலம் போற்றும் அரசாட்சி செய்யும் அன்னை மீனாட்சியாய் வந்து, நடத்தி வைத்து அருளாசி வழங்கிய எங்கள் தெய்வமே!

'எதற்காகவும், எவரிடமும், எப்போதும் என் மக்கள் எந்நாளும் கையேந்தி நிற்காத காலத்தை உருவாக்குவேன்' எனச் சூளுரைத்து சுழலுகின்ற பேரறிவுப் பெட்டகமே, மழைக்கால காளான்கள்போல் மாமன், மச்சான் என முளைத்திட்ட புல்லுருவிக் கட்சிகளுக்கெல்லாம் பூட்டுப் போட்ட புரட்சித் தாய், பொன்மனம் காத்து தமிழர்களெல்லாம் போற்றுகின்ற போதிமரத்துப் பூங்கொத்தே, நீதி காத்து, இனம் காத்து, மொழி காத்து, அன்னைத் தமிழை அரணாகக் காத்த தனி மனித

2016 பிப்ரவரி 17]

இராணுவம், தாயுருவ தெய்வம்! நான் நாளெல்லாம் வணங்கி எழும் என் குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, மக்கள் நல்வாழ்வுத் துறையின் அதிகாரிகள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோர் செம்மையாகச் செய்திட்ட பணிகளால் வரலாறு காணாத கடும் மழையால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் தூத்துக்குடி உள்ளிட்ட ஆறு மாவட்ட மக்கள் சிறு தொற்று நோய்கூட இல்லாமல் காக்கப்பட்டனர். (மேசையைத் தட்டும் ஒலி) சோழவந்தான் தொகுதிக்கு உட்பட்ட டி. வாடிப்பட்டி, மதுரை—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் நடப்பதால் அந்தப் பகுதியில் நடமாடும் மருத்துவக் குழு ஒன்று அமைக்க நல்லாட்சி செய்து வருகின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் மருத்துவக் குழு என்பது, Hospital on Wheels என்று சொல்லக்கூடிய இந்தத் திட்டமானது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டம் ஆகும். இதுவரை இந்தத் திட்டத்தில் கிட்டத்தட்ட மிகச் சரியாக, 8,43,622 முகாம்கள் இந்த ஐந்து ஆண்டுகளிலே நடத்தப்பட்டு, 5 கோடியே 8 இலட்சத்து 96 ஆயிரத்து 370 பொதுமக்கள் இதிலே பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, நடைபெற்று முடிந்த இந்த வெள்ள நிவாரணப் பணிகளிலே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான அறிவுரையின்படி, இந்த நடமாடும் மருத்துவக் குழு மகத்தான பணியை ஆற்றி, இங்கே zero epidemic என்று சொல்லக்கூடிய அளவிற்கு, தொற்றுநோய் இல்லையென்று சொல்வதைவிட, தொற்றுநோய் வருவதற்கு வாய்ப்பே இல்லை என்ற நிலையை மாண்புமிகு

அம்மா அவர்களின் அரசு உருவாக்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே நடமாடும் மருத்துவக் குழுவின் பங்கு மகத்தானது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியிலே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள, அந்த விபத்து ஏற்படும் பகுதியில், ஏற்கெனவே 108 இலவச ஆம்புலன்ஸ் சேவை திட்டத்தின்கீழ் இரண்டு வாகனங்கள் பிரத்யேகமாக அந்த நான்கு வழிச் சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. நடமாடும் மருத்துவக் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்னும் தேவைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, அரசின் சார்பில் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகப்பேறு தாய்மார்கள்மீது அதிக அக்கறை கொண்டு, நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், சோழவந்தான் தொகுதி, அய்யங்கோட்டையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், முடுவார்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. குமாரம், மணியஞ்சி, தண்டலை, பண்ணைகுடி, அச்சம்பட்டி, வாவிடமருதூர், டி.மேட்டுபட்டி, கல்லணை, கோட்டைமேடு ஆகிய ஊர்களில் உள்ள மகப்பேறு தாய்மார்கள் இரண்டு பஸ்கள் மாறி அந்த மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதி மக்களின் நலன்மீது கருணை கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு இப்பிரச்சினையை எடுத்துச்சென்று, கல்லணை நேதாஜி நகரிலோ அல்லது குமாரத்திலோ ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 பிப்ரவரி 17]

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஐந்து ஆண்டுகளில் 187 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை மக்களுடைய சேவைக்காகத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியிலுள்ள சித்தாலங்குடி, மண்ணடிமங்கலம் ஆகிய இரண்டு இடங்களிலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைமீது துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 5 வரை)[@]

பட்டியல்–1

1—

கண்மாய் கால்வாய்கள் புனரமைத்தல்

வினா எண் 17081 திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 2010-2011 ஆம் ஆண்டு உலக வங்கியின் மூலம் சிவகங்கை மாவட்ட கண்மாய்களை புனரமைக்க ஒதுக்கப்பட்ட பணம் ரூ.113.00 கோடியில் புனரமைக்கப்பட்ட வரத்துக் கால்வாய்கள் எத்தனை, கண்மாய் கால்வாய்களின் பெயர் என்ன?

(ஆ) விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2010-2011 ஆம் ஆண்டு உலக வங்கி நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்ட நீர்வள நிலவளத்

[@] *இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*